## பேரறிஞர் அண்ணா 118வது பிறந்த நாள்!

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே உள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கின்றார்.

## சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!



பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 118வது ஆண்டு பிறந்த நாளான இன்று (15.9.2026) காலை 9.00 மணி அளவில் சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மற்றும் கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு உள்ளிட்ட கழக முன்னணியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகின்றனர்.

கழக முன்னாள் அமைச்சர் பெருமக்கள், முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, மாற்றுத் திறனாளிகள் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை,இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல்தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, கல்வியாளர்கள் அணி ஆகிய அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**நே.சிற்றரசு**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

---

## தற்காலிகப் பணி நியமனத்தை கைவிடக்கோரி

# தமிழ்நாடு முழுவதும் 18ம்தேதி செவிலியர்கள் போராட்டம்!

## தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம் அறிவிப்பு!

சென்னை, செப்.15–

ஒப்பந்த முறையில் செவிலியர் பணியிடங்களை நிரப்புவதற்கு எதிர்ப்பு தெரிவித்து செவிலியர் சங்கங்கள் வரும் 18ம் தேதி தமிழகம் முழுவதும் போராட்டம் நடத்தப்படும் என தெரிவித்துள்ளன. தமிழகம் முழுவதும் அரசு மருத்துவமனைகளில் சுமார் 6,500 தொகுப்பூதிய செவிலியர்கள் பணியாற்றி வருவதாகவும், தேர்தலின்போது த.வெ.க. அளித்த வாக்குறுதியின்படி தங்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

நீண்ட காலமாக குறைந்த ஊதியத்தில் பணியாற்றி வருவதால், நிரந்தர அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊதியச் சலுகைகள், பணி பாதுகாப்பு மற்றும் பிற நலன்கள் தங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை மாநில அரசு உடனடியாக பரிசீலித்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சென்னை டி.எம்.எஸ். வளாகத்தில் தொகுப்பூதியத்தில் பணியாற்றும் 500க்கும் மேற்பட்ட செவிலியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது போராட்டம் நடந்த இடத்திற்கு நள்ளிரவிலும், நேரில் சென்ற தமிழக வெற்றிக் கழகத்தின் மாநிலச் செயலாளர், முதன்மைப் பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா முழு ஆதரவை தெரிவித்தார். செவிலியர்கள் மத்தியில் 'கொரோனா போன்ற இக்கட்டான பேரிடர் காலங்களில் தங்கள் உயிரைப் பணயம் வைத்து பணியாற்றிய செவிலியர்களை நடுரோட்டில் உட்கார வைத்திருப்பது கண்டிக்கத்தக்கது என்று குற்றம் சாட்டினார்.

### வாக்குறுதி அளித்த ஆதவ் அர்ஜுனா

மேலும், எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை, தமிழக வெற்றிக் கழகம் எப்போதுமே செவிலியர்களின் நியாயமான கோரிக்கைகளுக்காக துணையாக நிற்கும்' என்று உறுதியளித்தார். மேலும் த.வெ.க. தேர்தல் அறிக்கையில், ஆசிரியர்கள், செவிலியர்கள் மற்றும் மின் வாரிய ஊழியர்கள் உள்பட அரசுத் துறைகளில் 5 ஆண்டுகள் பணி அனுபவம் கொண்ட ஒப்பந்த ஊழியர்கள் அனைவரும் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்ற முக்கிய வாக்குறுதியை அளித்திருந்தது. ஆனால் ஆட்சிக்கு வந்த நிலையில் வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

இந்நிலையில் நேற்று முன்தினம் த.வெ.க. அரசு ஒப்பந்த அடிப்படையில் 4,724 செவிலியர் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பாணையை வெளியிட்டது. அதன்படி தமிழ்நாடு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில், தேசிய நலவாழ்வு குழுமத்தின் கீழ் இயங்கும் சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் செவிலியர்கள் தேர்வு செய்யப்படுவர்.

அதன்படி, ஒப்பந்தம் மற்றும் தற்காலிக செவிலியர் பணிக்கு மொத்தம் 4,724 காலிப் பணியிடங்கள் உள்ளது. இதற்கு விண்ணப்பிப்பவர்கள் அதிகபட்சம் 50 வயதுக்குள் இருக்க வேண்டும். செவிலியர் பட்டயப் படிப்பான ஜி.என்.எம். அல்லது இளங்கலை செவிலியர் படிப்பான பி.எஸ்.சி. நர்சிங் முடித்திருக்க வேண்டும், அரசு அல்லது அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் செவிலியர் கல்வி பயின்றிருக்க வேண்டும் என்று அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

https://nhm.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து வரும் 25ம் தேதி மாலை 5 மணிக்குள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட மாவட்ட நலவாழ்வு சங்க அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். தற்போது தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் உள்ள திருப்பூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களை தவிர்த்து, பிற மாவட்டங்களுக்கு இந்த அறிவிப்பு பொருந்தும் என்று மாநில நலவாழ்வு சங்கம் அறிவிப்பு வெளியிட்டது.

இந்நிலையில் தமிழ்நாடு அரசு, பணியமர்த்தப்படும் ஊழியர்களின் நலனையும் பொதுமக்களின் நலனையும் கருத்தில் கொண்டு இந்த முடிவை கைவிடுவதுடன், மருத்துவத்துறை தொடர்ந்து நிரந்தர தன்மையுடன் இயங்க அனைத்துப் பணியாளர்களையும் நிரந்தர தன்மையுடன் பணியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் தற்காலிகப் பணிநியமனத்தை கைவிடக் கோரி அனைத்து மாவட்டங்களிலும் வரும் 18ம் தேதி மாபெரும் போராட்டம் நடைபெறும் என்று தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம் அறிவித்துள்ளது.

---

# திசை திருப்பும் வேலைகளை முறியடிப்போம்!

# தெளிவாகப் பேச வேண்டியதைத் தீர்மானிப்போம்!

முதலீடுகளை ஈர்க்கவா விஜய் வெளிநாடு சென்றார்? அவர் என்னென்ன ஈர்த்தார்? அவரது ஆட்கள் தரப்பிலிருந்தே வெளியான படங்களும், வீடியோக்களும் லண்டன் பயணத்தின் ரகசியங்களை அம்பலப்படுத்திவிட்டன.

இதுபற்றி எவரும் கேள்வி கேட்கக் கூடாது என்பதற்காக, த.வெ.க. அமைச்சரும், பல கரைவேட்டிகளை மாற்றிய கேவலமான சாதனைக்குரியவருமான நிர்மல்குமார், தேவையே இல்லாமல் மிசா வழக்கு பற்றித் தொடர்ந்து பேசுகிறார். மிசா பற்றி விஜய்க்கும் எதுவும் தெரியாது. அவரது அமைச்சரவையில் இருக்கிற எவருக்குமே தெரியாது.

**காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி சேர்ந்து கொண்டு கச்சத்தீவு, எமர்ஜென்சி, மிசா என்பதெல்லாம், பூனையை மடியில் கட்டிக் கொண்டு சகுனம் பார்க்கிற வேலைதான். அந்தக் காங்கிரசிடம் கேட்க வேண்டிய கேள்விகளை தி.மு.க.வை நோக்கிக் கேட்கிறார்கள்.** அவதூறான செய்திகளை சட்டமன்றத்திலும் வெளியிலும் த.வெ.க. அமைச்சர்கள் பேசுகிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக விஜய்யே மோசமான முறையில் உடல் மொழியை வெளிப்படுத்தி சைகை செய்கிறார்.

**சுதந்திர இந்திய வரலாற்றில் ஜனநாயகத்தின் இருண்ட காலமான எமர்ஜென்சி காலத்தில் தி.மு.க. நடத்திய ஜனநாயக மீட்புப் போராட்டம் தமிழ்நாடு அளவிலானது மட்டுமல்ல, அது இந்தியா முழுமைக்குமானது. இந்திராகாந்தி அரசின் எமர்ஜென்சியை எதிர்த்துப் போராட்டம் நடத்திய தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணன் உள்ளிட்டவர்கள் இதனை உறுதி செய்திருக்கிறார்கள். அற்பர்கள் கூ(ட்)டமான த.வெ.க.வில் உள்ளவர்களுக்கு இவை எதுவும் தெரியாது.**

மிசா சிறைவாசத்தில் சித்திரவதைகளை எதிர்கொண்ட தியாகத் தலைவர் திராவிட நாயகரான நம் கழகத் தலைவர் அவர்களைக் கொச்சைப்படுத்தும் விதத்தில் விஜய்யும் அவரது கூட்டமும் பேசியதைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் 11.9.2026 அன்று தி.மு.க. சார்பில் மாவட்டத் தலை நகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடை பெற்றது.

சென்னை தெற்கு கழக மாவட்டத்தில், பிற கழக மாவட்டங்களும் இணைந்து சைதாப்பேட்டையில் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா அவர்கள் கழகத் தலைவரின் எமர்ஜென்சி கால தியாகத்தை விளக்கி, அவதூறாகப் பேசிவரும் நிர்மல்குமாருக்கு சவால் விட்டார். த.வெ.க. கூட்டம் அதனைத் திசை திருப்பிட முயன்றது. பிரச்சினையை விட்டுவிட்டு, ஆ.ராசா எம்.பி. பேசியதிலிருந்து ஒரு சொல்லை எடுத்துக் கொண்டு சமூக வலைதளங்களில் பரப்பியது.

**மிசா சிறைக் கொடுமைகளை அனுபவித்த கட்சிகளில் ஒன்றான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகூட, த.வெ.க.வின் வலையில் விழுந்த மீனாக தி.மு.க.விற்கு எதிராகத் துள்ளியது. மிசா கொடுமைகளுக்கு காரணமான காங்கிரஸ் கட்சியின் 'அல்லுசில்லு'களும் த.வெ.க.வின் கூலிப்படை போல செயல்பட்டன. ஒரு நாள் முழுவதும் இதுவே விவாதமாக மாறியது.**

பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளில் அவர் சொன்ன ஓர் எடுத்துக்காட்டை இங்கே நினைவூட்ட வேண்டியது அவசியமாகிறது. உண்மை என்ன என்பது ஊருக்கே தெரிந்திருந்தாலும் எதிராளிகள் நம்மைப் பற்றி அவதூறு பரப்பிக்கொண்டேதான் இருப்பார்கள் என்பதையும், அவர்கள் போக்கிலேயே நாம் போய்க்கொண்டிருந்தால் நம் பணிகளைக் கவனிக்க முடியாது என்பதையும் விளக்குவதற்காக அண்ணா சொன்ன எடுத்துக்காட்டு இதுதான்.

**"ஒருத்தன் அண்ணாதுரைக்கு யானைக் கால்னு சொன்னா.. நான் ஒரு மீட்டிங் போட்டு பெட்ரோமாக்ஸ் லைட் வச்சு பாருங்க என் கால் யானைக்கால் இல்லை என காட்டணும். அடுத்து அவன் என்ன சொல்வான்? அண்ணாதுரை கெட்டிக்கார ஆளு, வலது கால் தானே காட்டுனாரு, இடது காலை காட்டச் சொல்லுங்கன்னு சொல்வான். உடனே நான் இன்னொரு மீட்டிங் போட்டு பெட்ரோமாக்ஸ் லைட் வச்சு இடது காலை காட்டணும். உடனே திரும்பவும் அண்ணாதுரை விவரமான ஆளு, முழங்கால் வரை தான் காட்டுனாரு. அதுக்கு மேல காட்டுனா ரான்னு சொல்வான். சொல்றவன் சொல்லிட்டு தான் இருப்பான், அதை எல்லாம் கண்டுக்கவே கூடாது. சொல்றவன் தான் நிரூபிக்கணும்"** என்பது கழகத்தினருக்கு பேரறிஞர் அண்ணா சொன்னதை அவர் பிறந்தநாளில் நினைவில் கொண்டு, நம் மீதான அவதூறுகளுக்கு உரியளவில் பதில்களைக் கொடுத்துவிட்டு, அவதூறு பரப்புகிறவர்கள் செய்கிற அநியாயங்களைத் தோலுரித்துக் காட்டுவதே நம்முடைய முதன்மையான பணியாக அமைய வேண்டிய நேரம் இது.



**கோவி.லெனின்**
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

விநாயகர் சதுர்த்தியையொட்டி கடந்த சனி, ஞாயிறு, திங்கள் என மூன்று நாட்கள் தொடர் விடுமுறை என்பதால் வெள்ளிக்கிழமை மாலை முதலே சென்னையிலிருந்து வெளியூர் செல்பவர்கள் தங்கள் ஊருக்கானப் பேருந்துகளைத் தேடத் தொடங்கிவிட்டார்கள். **த.வெ.க. ஆட்சியில் இலஞ்சமும் ஊழலும் விஜய்யைப் பார்த்து பயந்து ஓடிவிட்டது போல பேசியதை யாரும் மறக்க மாட்டார்கள். ஆம்னி பஸ்கள் கூடுதல் கட்டணமின்றி இயங்கும் என்று அதன் சங்கத்தைச் சார்ந்த ஒருவர் பேட்டி அளித்ததும் நினைவிருக்கலாம். ஆம்னி பஸ் டிக்கெட் என்பது விமான டிக்கெட் விலைக்கு விற்கப்பட்டது. ஊழலை ஒழித்த ஆட்சி என்றால் ஏன் இந்த அநியாயமானக் கூடுதல் கட்டணம்?** த.வெ.க. அரசு என்ன நடவடிக்கை எடுத்தது?

கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு நினைவுப் பேருந்து முனையத்தில் வெள்ளி இரவில் கடல் போலக் கூட்டம் காத்திருக்கிறது. எந்த ஊருக்கும் போதுமான அளவில் அரசுப் பேருந்துகள் இயக்கப்படவில்லை. அதற்கான திட்டமும் த.வெ.க. அரசிடமில்லை. தி.மு.க. ஆட்சிக்காலத்தில் பொங்கல், தீபாவளி, பண்டிகை நாட்கள் மற்றும் வார இறுதி விடுமுறை நாட்களில் பயணிகளின் தேவையை கருதி பேருந்துகள் இயக்கப்பட்டன.

அப்போதும்கூட, தேவையற்ற பிரச்சினைகளை ஊடகங்கள் மூலமாக எதிராளிகள் கிளப்பிய நிகழ்வுகள் உண்டு. ஆனாலும், திராவிட மாடல் அரசின் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த சிவசங்கர் அவர்கள் விடிய விடிய கிளாம்பாக்கத்திலேயே நின்று, கடைசிப் பயணியும் சொந்த ஊருக்குப் போய்ச் சேர்வதற்கான பேருந்து வசதியை செய்தார். த.வெ.க. அரசின் போக்குவரத்துத்துறை அமைச்சர் எங்கே போனார்?

**வெள்ளிக்கிழமை ஊருக்குப் போக வேண்டியவர்கள் ஞாயிறு இரவு வரை கிளாம்பாக்கத்திலேயே காத்திருந்த பேரவலத்திற்கு விஜய்யோ அவரது அரசில் உள்ள அமைச்சர்களோ பொறுப்பேற்க முன்வந்தார்களா? தி.மு.க.வுக்கு எதிராக அவதூறு பேசுவது ஒன்றுதான் த.வெ.க. ஆட்சியின் முக்கியமான வேலையா?**

மக்களிடம் நாம் கொண்டு செல்ல வேண்டியது, அவர்கள் சார்ந்த இத்தகைய பிரச்சினைகளைத்தான். மின்வெட்டால் தமிழ்நாடே இருளில் மூழ்கியுள்ளது. முதலமைச்சராகிவிட்டவரின் தொகுதி பெரம்பூர். அங்கு மின்வெட்டு தொடர்கிறது. மின்வாரிய அலுவலகத்திற்குச் சென்று, காரணம் கேட்கும் பொதுமக்களுக்கு உரிய பதில் தரப்படுவதில்லை. மின்வெட்டுக்கு அடுத்தபடியாக, பெரம்பூர் தொகுதியில் குடிநீர் விநியோகமும் கடந்த 5 நாட்களாக இல்லை. மகாகவி பாரதியார் நகர், கண்ணதாசன் நகர் உள்ளிட்ட பகுதி மக்கள் குடிக்கத் தண்ணீர் இல்லாமல் தவிக்கிறார்கள்.

**குடிதண்ணீர் இல்லை. பேருந்து வசதி செய்யப்படவில்லை. அரிசி விலை ஏறிவிட்டது. மின்சாரம் இல்லை. மின்கட்டணம் உயர்கிறது. தீப்பந்தங்களை ஏற்றி வந்து இரவு நேரத்தில் மக்கள் சாலை மறியல் செய்கின்ற அவலம் தொடர்கிறது. மக்களின் அடிப்படைத் தேவைகள் எதையும் கண்டுகொள்ளாமல், லண்டனில் ரீல்ஸ்க்கான ஷூட்டிங் நடத்திக் கொண்டிருக்கிறார் விஜய். தொழில் முதலீடுகளை ஈர்ப்பதாகச் சொன்ன பயணத்தில் தொழில்துறை அமைச்சர் பங்கேற்கவில்லை. விஜய்யின் நண்பாநண்பீஸ்தான் கூடவே இருக்கிறார்கள். ஊரான் வீட்டு நெய்யில் ஸ்வீட் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார் விஜய்.**

மக்களிடம் இவற்றை அம்பலப்படுத்துவோம். குறிப்பாக, இடைத்தேர்தல்களை சந்திக்கும் மதுராந்தகம் - தாராபுரம் தொகுதிகளில் பரப்புவோம். த.வெ.க.வின் திசை திருப்பும் சூழ்ச்சியை முறியடிப்போம். பேரறிஞர் அண்ணா சொன்னது போல மக்களிடம் செல்வோம். ஆட்சியின் அவலத்தை மக்களிடம் சொல்வோம். நாம் பேச வேண்டியதை நாமே தீர்மானிப்போம்.

---



குன்றத்தூர் மத்திய ஒன்றியச் செயலாளர் திருமுடிவாக்கம் ஏ.மணி – விஜயலட்சுமி மணி ஆகியோரின் புதல்வர் மா.தமிழரசன் த.பார்கவி ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில் கழகப் பொருளாளர் – திருப்பெருமந்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, ஆர்.எஸ்.பாரதி, சிறுவேடல் செல்வம் எம்.பி., வைத்தியலிங்கம், எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ மனோகரன், வடக்கு ஒன்றிய செயலாளர் வந்தே மாதரம் உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

---

# மேட்டூர் அணை நீர்மட்டம் 88.5 அடியாக சரிவு!

மேட்டூர், செப்.15-

ஒகேனக்கல் காவிரியில் நேற்று முன்தினம் விநாடிக்கு 7,000 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 8,000 கனஅடியாக அதிகரித்தது. இதனால், ஆற்றில் நீர்வரத்து அதிகரிப்பால் பரிசல் இயக்க மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது. மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் விநாடிக்கு 2,495 கன அடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 5,227 கனஅடியாக அதிகரித்தது.

அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்காக விநாடிக்கு 12,000 கனஅடி வீதமும், கிழக்கு மேற்கு கால்வாயில் குடிநீர் தேவைக்காக 400 கன அடி வீதமும் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. வரத்தை காட்டிலும் நீர் திறப்பு அதிகமாக இருப்பதால், அணையின் நீர்மட்டம் வேகமாக சரிந்து வருகிறது. நேற்று முன்தினம் காலை 88.83 அடியாக இருந்த அணையின் நீர் மட்டம் நேற்று காலை 88.52 அடியாக சரிந்தது. நீர் இருப்பு 50.97 டி.எம்.சி. யாக உள்ளது.

---

## 25 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



### மாஸ்டர் தமிழ்ப்பித்தன் (எ) ம.வேலுச்சாமி

(மாநில தொண்டரணிச் செயலாளர், தி.மு.க.)

15.9.2001 அன்று கழகத் தலைவரிடம் பதக்கம் பெற்ற மகிழ்ச்சியில் திளைத்த எங்கள் இதய தெய்வத்திற்கு நினைவஞ்சலி!

மகன்

**வேல்.உமாகாந்த்** துணைச் செயலாளர், மாநில பொறியாளர் அணி